1994 மே 2] [திரு. ம. சின்னசாமி]

(4) மேற்பார்வைத் தொழிலாளர்கள் ' ஏ 'மற்றும் ' பி ' பிரிவு. அடிப்படைச் சம்பளம் ரூ. *285:* வீட்டு வாடகைப்படி ரூ. *32.50;* சலவைப்படி ரூ.*30;* மருத்துவப்படி ரூ. *62.50;* ஆக மொத்தம் ரூ. *410.*

1230 புள்ளிகளுக்கு மேலான இந்திய விலைவாசி நுகர்வோர் குறியீட்டு புள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரு. *2* வீதம் மாறுபடும் அகவிலைப்படி வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது. அடிப்படைச் சம்பளத்தில் *5* விழுக்காடு பருவகால தொழிலாளர்களுக்கு உயர்வு. தொழிற் சாலைக்குள்ளே வேலை செய்யும் தினக்கூலி மற்றும் என்.எம்.ஆர். ஆகியவர்களுக்கு மட்டும் பணி ஊதியம் - ஆக்குபேஷனல் வேஜஸ் - வழங்கப்படும்.

1.10.1993-லிருந்து நிலுவைத் தொகை கணக்கிடப்பட்டு, *10.5.1994*-க்குள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

31.3.1998 வரை இந்த ஒப்பந்தம் அமலில் இருக்கும். பல்வேறு சிரமங்களைத் தாங்கி கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளும், கடுமையாக உழைத்து உற்பத்தியைப் பெருக்குகிற தொழிலாளர்களும் சர்க்கரைத் துறையின் இரண்டு கண்கள். கரும்பு உற்பத்தியாளர்களே எதிர்பார்க்காத அளவு, அவர்கள் வியக்கும் வகையில், வரலாறு காணாத அளவுக்கு, கரும்பு விலையும் இந்த ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகப்படுத்தி கொடுத்தது, அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. விவசாயிகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கொடுத்த மேன்மையான பரிசு. தொழிலாளர்கள் உள்ளம் குளிரும் வகையில் ஊதிய உயர்வும், மற்ற சலுகைகளும் சுமார் *30,000* தொழிலாளர்களுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கொடுத்த இந்தப் பரிசு (மேசையைத் தட்டும் ஒலி) மே தினப் பரிசாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) புயல் வெள்ளத்தால் சேதமடைந்த அம்பாசமுத்திரம் தொகுதி முண்டந்துறை பாலத்தைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். முருகையா பாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர் முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அம்பாசமுத்திரம் தொகுதியில், சென்ற ஆண்டு ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் முழுவதும் அடித்துச் செல்லப்பட்ட முண்டந்துறை பாலத்தை மீண்டும் புதிதாக கட்டித் தருவதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

முண்டந்துறை பாலம், பாபநாசம் மேல் அணை சாலை எனப்படும் அரசு இதர மாவட்டச் சாலையில் கி.மீ. 16/8-ல் சேர்வலாற்றின் குறுக்கே இருந்தது. அது 13.11.92 அன்று புயல் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. இந்தப் பாலம் சேர்வலாறு மின் நிலையத்திற்கும் முண்டந்துறை வன விலங்கு சரணாலயத்திற்கும் இடையே இருந்த ஒரே இணைப்புப் பாலம் ஆகும். எனவே, இந்தப் பாலம் திரும்பக் கட்டப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

(2) இந்தப் பாலத்தை ரூ. 150 லட்சம் செலவில் புதிய பணிகள் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப்பணி) அவர்கள் அரசுக்கு பிரேரணை அனுப்பி வைத்துள்ளார்கள். இந்தப்பாலம் கட்டப்பட வேண்டிய பகுதி வனத்துறையின் பராமரிப்பில் இருப்பதால் வனத்துறையிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் இந்தப் பாலத்திற்கு ஆகும் செலவில் 50 சதவீதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என மின்சார வாரியத்திற்கு எழுதப்பட்டது. ஆனால் மின்வாரியத்தினர் பாலச் செலவில் 25 சதவீதத்தை ஏற்றுக் கொள்ள சம்மதம் அளித்தனர். இப்பாலம் திரும்பக் கட்டப்படுவதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத்தான் அதிகப் பயன் உள்ளதாக அமையும். எனவே, மின்சார வாரியம் 50 சதவீத செலவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மின்சார வாரியத்திடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே இந்தப் பாலத்தைக் கட்ட வேண்டியது அவசியம்தான் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத்

தெரிவித்துக்கொள்கிறேன். 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாக அந்தப் பாலம் அடித்துச் செல்லப்பட்டு விட்டது. அதற்கு பிறகு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு அங்கேயுள்ள நெடுஞ்சாலைத் துறை வேக வேகமாக மாற்று ஏற்பாடு செய்து கொடுத்து இன்றைய தினம் வண்டி வாகனங்கள் எல்லாம் சென்று கொண்டிருக்கின்றன. இருந்தாலும் இது நிரந்தரமான பாதையாக அமையாது. மேலும் இந்தப் பாலத்தின் வழியாகத்தான் தமிழகத்திற்கு மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிற பாபநாசம் அணையும், சேர்வலாறு அணையும் அங்கே இருக்கின்றன. பஞ்சாபிகளுக்குச் சொந்தமான இரண்டு தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோவில் என்ற பிரசித்தி பெற்ற கோவில் இருக்கிறது. பல ஆயிரக்கணக்கான மக்கள் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். மின்சாரத் துறை தொழிலாளர்களின் குடியிருப்புகள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு அந்தப் பாலம் மிக முக்கியமானது. அந்தப் பாலத்தை கட்டிக் கொடுப்பதன் மூலம் அங்கேயுள்ள மக்கள் மட்டுமல்ல, எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கும் என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பாலத்தை கட்டிக் கொடுக்க இந்த ஆண்டு நடவடிக்கையெடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே நான் விவரமாகத் தெரிவித்து இருக்கிறேன். இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு 1½ கோடி ரூபாய்ச் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது. இதற்கு 50 சதவீதம் மின்சார வாரியத்திலேயிருந்து நிதி உதவி பெறவேண்டும் என்று நெடுஞ்சாலைத்துறையினர் கேட்கிறார்கள். அவர்கள் 25 சதவீதம்தான் கொடுக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த இரண்டு துறைகளும் என்னிடத்திலே இருக்கிற காரணத்தாலே, இந்த இரண்டு துறை அதிகாரிகளையும் அழைத்து, யார் யார் எவ்வளவு தொகையினை அளிக்க முடியும் என்பதற்கு, கூட்டாக ஒரு மீட்டிங் ஏற்பாடு செய்து, அதன் மூலமாக அரசுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக 2 துறை அதிகாரிகளும் மின்சாரத்துறை, மற்றும் நெடுஞ்சாலைத் துறையும் இணைந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று அரசின் சார்பிலே அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. அவர்கள் விரைவிலே முடிவு எடுத்து இதை நடை முறைப்படுத்துவதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1994 மே 2

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் எப்போதும், சொன்னதை நிறைவேற்றக்கூடிய ஆற்றல் மிகுந்த அமைச்சர் ஆவார்கள். ஒரு தடவை சொன்னால் போதும், அதை நினைவிலே வைத்துக் கொண்டு, அந்தக் காரியத்தை முடித்துக் கொடுப்பதிலே வல்லவர். அவர்கள் இந்தப் பாலத்தை முடித்துத் தருவேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதிலே வனத்துறைக்கும் சம்பந்தம் மிகவும் அதிகமாக இருக்கிறது. வனத்துறைக்கும் இந்தப் பாலம் மிகவும் அவசியமாக இருக்கிறது. இப்போது மேற்குத் தொடர்ச்சி மலைத்திட்டத்திற்கு பல கோடிக்கணக்கான பணத்தை மத்திய அரசாங்கம், அதனுடைய வளர்ச்சிப் பணிகளுக்காக ஒதுக்கி இருப்பதாகத் தெரிகிறது. எனவே, மேற்குத் தொடர்ச்சி மலைத்திட்டத்தின் கீழ் ஏதாவது பணத்தை வாங்கி—அவர்களுடைய உதவியையும் வாங்கி—இந்தப் பாலத்தை முடித்துத் தரவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டிலேயே இந்தப் பாலத்தை முடிக்கவேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்சாரத்துறையையும் வைத்திருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையையும் வைத்திருக்கிறார்கள்—இந்தப்பாலத்தைக் கட்டுவதிலே கஷ்டம் இருக்காது என்று நான் கருதுகிறேன். எனவே, இந்த ஆண்டுக்குள் இந்தப் பாலத்தைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல, வனத்துறையினுடைய அனுமதி மட்டும்தான் பெறப்பட்டு இருக்கிறது. வனத்துறையிடம் நிதியைக் கேட்டால், அவர்கள் எப்படித் தருவார்கள் என்பது விளங்காத புதிராக இருக்கிற காரணத்தால், நான் அதற்குள்ளே போகவில்லை. ஏன் என்றால், ஒவ்வொரு துறையிடமிருந்தும் நாம் நிதியைப் பெற்று, அதற்காக அவர்களிடத்திலே அனுமதியைப் பெற்று, இப்படி நீண்டுகொண்டே இருந்தால், காலதாமதம் ஆகும் என்பதற்காகத்தான் மின்சார வாரியத்திலே மின் உற்பத்தித் தேவைக்காக இந்தப் பாலம் அவசியமாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதிகளுக்குச் செல்வதற்கு உதவியாக இருக்கும் என்ற காரணத்தாலே, நாம் ஏற்கனவே மின்சாரத் துறையை நாடி இருக்கிறோம். ஆகவே, அவர்களும், நம்முடைய

நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளும் சேர்ந்து இதற்கு முடிவு எடுக்கவேண்டும் என்று அரசின் சார்பிலே அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்தேன். ஆகவே, நான் தெரிவித்ததைப் போல, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து, விரைவிலே இது சம்பந்தமாக முடிவு எடுக்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மண்டல் குழு பரிந்துரைகளின்படி கள்ளர், மறவர், அகமுடையர் இனத்தவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். ஆண்டித் தேவர் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார். திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் குழு பரிந்துரைகளின்படி, கள்ளர், மறவர் அகமுடையர் இனத்தவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாதது குறித்த' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தமிழ்நாட்டில் அகமுடையர் வகுப்பு பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும், கள்ளர் மற்றும் ஈசநாட்டு கள்ளர் வகுப்புகள் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளாகவும், கந்தர் கோட்டை கள்ளர் வகுப்பு தஞ்சாவூர், நாகை-காயிதேமில்லத் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சீர்மரபினராகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தபட்ட வகுப்பாகவும், கூட்டப்பால் கள்ளர் வகுப்பு திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சீர்மரபினராகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப் பட்ட வகுப்பாகவும், பிரமலைக்கள்ளர் வகுப்பு பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராஜர், இராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை. தஞ்சாவூர் மற்றும் நாகை—காயிதேமில்லத் மாவட்டங்களில் சீர்மரபினராகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட